# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 233/மா/2025**

**நாள்: 06.02.2026**

| | | |
|---|---|---|
| M. நெடுஞ்செழியன்<br>தஞ்சாவூர் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தஞ்சாவூர் மாநகராட்சி | --- | எதிர் மனுதாரர் |

தஞ்சாவூர், திருவேங்கடம் நகர், கதவு எண் 106 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.நெடுஞ்செழியன் என்பவரின் 24.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2025 அன்று பெறப்பட்டு 233/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தஞ்சாவூர், திருவேங்கடம் நகர், கதவு எண் 106 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. நெடுஞ்செழியன் என்பவர் தனது 24.06.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"The complainant respectfully submit that,

1. The Thanjavur Municipal Corporation invite tenders vide ந.க. எண் 8031/2023/எம்சிஏ3 நாள் 31.07.2023 for lease the premises near Thanjavur new bus stand in the name and style of "Muthamizh Arignar Kalaignar Mu. Karunanidhi Arangam" for 3 years only.
2. Only two tender applications were received. One Mr. Ramesh quoted maximum rent of Rs.25 lakhs per month and Mr. Vetrivel quoted rent of Rs.24 lakhs per month.
3. In the tender advertisement or lease agreement the lease property was not meant for Multiplex theatre.

4. It was recorded in the Resolution No.350 of Thanjavur Municipal Corporation that the highest bidder fails to remit the additional deposit, the action was decided in favour of the second bidder Mr. Vetrivel.

5. There is no information about the fixation of Earnest Money Deposit for the participation of auction, date of deposit by the participants except Mr. Ramesh, whether the EMD of Mr. Ramesh has been forfeited or not, date of confirmation the auction in favour of Mr. Vetrivel, date of order issued to Mr. Vetrivel to remit the additional deposit and date of remittance. There is so many controversies identified in the process of auction which are listed below:

| Sl. No. | Dates | Events | Remarks |
|---|---|---|---|
| 1 | 17.08.2023 | Auction Date | |
| 2 | 19.08.2023 | Vetrivel paid 3 lakhs | Amount paid before confirmation the auction. |
| 3 | 08.09.2023 | Mr. Ramesh fails to remit Additional deposit up to 08.09.2023 | |
| 4 | 21.09.2023 | It was recorded that Mr. Vetrivel offer for highest rent | But no documentary evidence for fixation of rent and offer. |
| 5 | 29.09.2023 | Auction confirmed vide Resolution No.350 | |
| 6 | 10.11.2023 | Agreement | |
| 7 | 10.11.2023 | Possession handed over | |
| 8 | 12.12.2023 | Notice for unauthorized modification | |

It is revealed from the above narrated events that there is no evidence about the submission of the highest offer of Mr. Vetrivel on 21.09.2023. (Please refer the Thanjavur Municipal Corporation letter ந.க. எண் 9031/2023/எம்சிஏ3 நாள் 12.12.2023). But he allowed to paid additional deposit on 19.08.2023 i.e. nearly one month before the date of offer and confirmation.

6. The Agreement was executed in favour of the lessee Mr. Vetrivel for another period of 9 years which was not mentioned in the advertisement by invoke the G.O. Ms. No.92, Municipal Administration and Water Supply Department dated 03.07.2007 which the Hon'ble Court express it's anguish about the G.O. which the observations of the Court were quoted in the legal notice also. The following malpractices were committed in the auciton of "Muthamizh Arignar Kalaignar Mu. Karunanidhi Arangam".

a. Absence of any provision to extend the lease period beyond the period of 3 years in the advertisement, Mrs. Mageswari, the then commissioner entered agreement with the lessee to extend the period of lease for another period of 9 years with corruptive intention. The lease property is situated in the prime location and developing area there is no necessary to extend the lease for another nine years. Furthermore the condition stipulated in the lease agreement that the lease may extended further period of 9 years if the leasee desires to extend the lease. But no condition was prescribed to extend the lease or terminate lease based on the violation of lease agreement and others by the lessor. Since the lessor's option is immaterial for extension, this provision is in favour of the Lessee and adversely affected the interest of the Corporation.

b. In accordance with the Resolution No.350 dt. 29.09.2023, only 5 items out of 45 were approved and auction of the remaining 40 items were cancelled and resolved to keep for re-tender. But item No.45, only two tenderers were participate and one of the tenderer who opted highest bit fails to remit additional deposit as per rules. The remaining tenderer was approved by the officials which is inconsistent with the mandatory provisions with utmost urgency which explained in the above table.

c. In the above narrated circumstances, the Commissioner who was the tender finalizing authority must choose to re-tender option par with other 40 items. Hence the allotment made to Mr. Vetrivel is without transparency and fare competition and for extraneous consideration.

d. It was not disclosed whether caution deposit paid by Mr. Ramesh was forfeited or not.

e. The Lessee modify the building without applying permission from the landlord i.e. commissioner of Thanjavur Municipal Corporation.

f. Since the possession was handed over to the lessee on 10.11.2023 no rent was paid upto 19.09.2024 and no action was taken to vacate the premises for contractual violation.

g. Modification plan was not approved by DTCP and stability certificate was not obtained after modification.

h. The PIO and Appellate Authority purposefully refuse to disclose most of the information which sought under the provision of The Right to Information Act, 2005.

i. Legal notice dt.30.09.2024 was sent the Commissioner and other officials, no action was taken till date.

j. Since the name of the Authorities and officials who responsible for these deviations and corruptions were sought under RTI and refused to disclose, Sanction of prosecution was sent to the Commissioner on 13.02.2025 without mention the names of the authorities and officials.

k. In W.P (MD) No. 20247 of 2019 S. Sellapandi vs. The Commissioner cum Special Officer, Thanjavur Municipal Corporation, Hon'ble Madras High Court of Madurai Bench held,

> we note that exercise of power under G.O. No.92, dated 3.7.2007 has given rise to arbitrariness and most of the time, power has been misused. **In several decisions of this Court, it has been held that the condition prescribed in G.O. 92 is not mandatory but only directory and the concerned Municipal Corporation or any other local body is well within its jurisdiction to initiate proceedings to bring the shops and other properties owned by the corporation/local bodies by public auction for the purpose of augmenting revenue.**
>
> ...........................................................................
>
> ...........................................................................
>
> in all cases, it is found that there is cartel and the same set of persons are in possession of the shops and **paying meagre rent to the Corporation and simultaneously sub-letting the shops to various third parties without the permission of the Corporation. It is to be noted that the exercise of power under G.O. Ms. No.92, dated 3.7.2007 is not only arbitrary but there is favoritism and nepotism and the very object of lease has been defeated. Though several decisions of this Court which have consistently taken a view that G.O. Ms. No.92 has been misused, the Government has been sitting tight over the matter as a mute spectator and has not issued any clarification or guidelines to the local bodies.**

The conditions of lease agreement is full of ambiguities. For example, clause 1 prescribe that the lessee can conduct his own business, business of his subsidiaries institutions and franchisees in the presmises. But this clause further prescribes that the lease amount must be remit the lessee only. Since the entire premises utilizing for his own business and his franchisees and subsidiaries, there is no question of third parties to remit the lease amount. Furthermore the lessee advertised for sublet the premises. If the part of the premises are sublet to third parties, the rent may be fixed in accordance with market fluctuation. Factual position is like this, fixed meagre rent of 15% hike for every three years slot for 12 years is arbitrary and illegal.

l. The present commissioner Mr. Kannan also not initiate any step to remove the provision which inducted by the then commissioner Mrs. Maheshwari to extend the lease period for extraneous consideration.

m. I sent to a notice to the DVAC and the same was forwarded to Commissioner of Municipal Administration vide petition No.2417/2025/LB/TH dt. 27.02.2025 for verification of documents. But till date no action was taken.

n. The copy of RTI applications, reply of Thanjavur Municipal Corporation and RTI appeal are enclosed herewith for your kind perusal and appropriate action. All the agreements copies were sought to ensure the homogeneous clause and conditions of lease agreement and the same was refused by the PIO to suppress the corruption.

The following issues must be solved in this corrupted lease transaction:

- How the lease was confirmed in favour of Mr. Vetrivel who was the second highest bidder?
- Whether the EMD of Mr. Ramesh has forfeited or not? If, forfeited all details may verify.
- Why the rent was not collected upto 19.09.2024.
- Why the officials and authorities fails to take action to vacate the lease premises for violation of lease agreement by modification of lease premises without approval of the landlord?
- Why the lease period was extended to another 9 years which the lease period was mentioned as 3 years in the advertisment?
- Who was the beneficiary from the extraneous agreement and failure to cancel the lease or the condition to extend the lease period upto 12 years including initial period of 3 years.

  No criminal prosecution initiated against Mrs. Maheswari, Mr. Kannan and other authorities and officials who involved in the scam even made a complaint to Secretary Municipal Administration and Commissioner of Municipal Administration.

In these circumstances it is requested

I. to direct Commissioner, Thanjavur Municipal Corporation to submit before the Ombudsman all documents which were refused by the PIO with Mala fide intention and to ensure the transparency and effective adjudication.

II. to direct Respondents to appear before the forum for personal inquiry and for cross examination of the petitioner.

III. to refer this application to the CBCID to file a criminal case against Mrs. Maheshwari, Mr. Kannan, Commissioner of Thanjavur Municipal Corporation, other officials who reponsible for these malpractice and the elected Mayor and members of council of Thanjavur Municipal Corporation and Mr. Vetrivel u/s 218 of BNSS and section 19 of Prevention of Corruption Act, 1988 for the comission of offences punishable under section 318, 336, 49 r/w 61 of BNS and section 13 of the Prevention of Corruption Act, 1988 by verifying the documents which are under the custody of Thanjavur Municipal Corporation which refused to disclosed by the PIO.

IV. to collect from all Respondent to the loss occurred for Thanjavur Municipal Corporation by the decision taken by the offficials and elected members to fix the lowest rent without re-tender.

V. to send the proposal to the secretary to government to annul the G.O. Ms. No.92, Municipal Administration and Water Supply Department dated 03.07.2007 by keeping in mind with the above mentioned observations of the Hon'ble Courts.

VI. and pass any other or further orders which the forum deems to fit in the fact and circumstances of the case and thus render justice." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 10.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தனது அறிவிப்பு ந.க. எண் 9660/2024/எம்சிஏ4 நாள் 24.07.2025–ல் மனுதாரருக்கு முகவரியிட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்ட அறிவிப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி மாநாட்டு அரங்கம் 17.08.2023ம் தேதி ஏலம் விடப்பட்டது. மேற்படி ஏலத்தில் திரு. ரமேஷ் மற்றும் திரு. வெற்றிவேல் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இதில் திரு. ரமேஷ் என்பவரால் மாதவாடகை ரூ.25.00 இலட்சத்திற்கும், திரு. வெற்றிவேல் என்பவரால் மாதவாடகை ரூ.24.00 இலட்சத்திற்கும் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை கேட்கப்பட்டது.

இதில் திரு. ரமேஷ் என்பவர் ரூ.6.00 கோடி கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாததாலும், திரு. வெற்றிவேல் என்பவரால் 19.08.2023ம் தேதியில் கூடுதல் வைப்புத் தொகை ரூ.3.00 கோடி செலுத்தப்பட்டதால், திரு. வெற்றிவேல் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகை ஊர்ஜிதம் செய்யப்பட்டு மாமன்ற தீர்மான எண்.380, நாள் 20.09.2023–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், திரு. வெற்றிவேல் என்பவரால் 05.10.2023ம் தேதியில் கூடுதல் வைப்புத் தொகை ரூ.2.50 கோடி செலுத்தப்பட்டதால் மாத வாடகை ரூ.25.00 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது.

இந்நிலையில் மேற்படி மாநகராட்சி அரங்கத்தை திரையரங்கமாக மாற்றுவதற்கு குத்தகைதாரருக்கு அனுமதி வழங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண் இ2/70806/2023 நாள் 13.03.2023–ல் இம்மாநகராட்சியின் தடையின்மை சான்று கோரப்பட்டது. மேலும் குத்தகைதாரரால் மாநகராட்சியின் தடையின்மை சான்று

இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கிட கோரி குத்தகைதாரரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.5612 of 2024–ன் தீர்ப்பாணை நாள் 27.03.2024–ல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரிய சட்டவிதிகளுக்குட்பட்டு 3 வார காலத்திற்குள் உரிய ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டது.

தஞ்சாவூர் மாநகராட்சி கடிதம் எண் 4344/2021/எப்1, நாள் 03.04.2024 மற்றும் 07.05.2024–ல் மேற்படி கட்டிடத்தை திரையரங்கமாக மாற்றுவதற்கு மாநகராட்சியால் எவ்வித அனுமதியும் அளிக்கப்படாததால் தடையின்மை சான்று வழங்க ஆட்சேபணை உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 02.05.2024 நாளிட்ட மேற்குறிப்பில் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீள சமர்ப்பிக்க குத்தகைதாரருக்கு விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் இவ்வுத்திரவினை எதிர்த்து குத்தகைதாரரால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.11735 of 2024 மற்றும் மாநகராட்சி ஆட்சேபணை கடிதத்தை எதிர்த்து இம்மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண் W.P.(MD) No.11737 of 2024 என இரண்டு வழக்குகள் தொடரப்பட்டது.

இதன்பின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க. எண் இ2/70806/2023 நாள் 10.06.2024–ல் குத்தகைதாரரின் விண்ணப்பம் நிராகரித்து உத்திரவிடப்பட்டது.

இதனை எதிர்த்து குத்தகைதாரரால் தொடரப்பட்ட வழக்கு எண் W.P. (MD) No.13279 of 2024–ன் தீர்ப்பாணையில் இம்மாநகராட்சியால் வழங்கப்பட்ட ஆட்சேபனையை ரத்து செய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 4 வார காலத்திற்குள் உரிய ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண் இ2/70806/2023 நாள் 13.08.2024, 05.09.2024 மற்றும் 09.09.2024–ல் மீண்டும் இம்மாநகராட்சிக்கு ஆட்சேபனை உள்ளதா என அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க, தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலக கடிதம் நாள் 12.09.2024–ன் வாயிலாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குத்தகைதாரரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் W.A. (MD) No.1708 of 2024–ன் தீர்ப்பாணை நாள் 22.10.2024–ல் இம்மாநகராட்சியின் ஆட்சேபனையை கருத்தில் கொள்ளாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 10 நாட்களுக்குள் உரிய உத்திரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் திரையரங்குகள் நடத்த குத்தகைதாரருக்கு செயல்முறை ந.க. எண் இ2/53074/2024, நாள் 20.12.2024–ல் அனுமதி வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலக கடிதத்தில் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் W.A. (MD) No.1708 of 2024–ன் 22.10.2024 நாளிட்ட உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய

இயலுமா என அரசு வழக்கறிஞர் திரு. திலக்குமார் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க அரசு வழக்கறிஞர் அவர்களின் கடிதம் நாள் 08.11.2024–ல் மேல்முறையீடு செய்வதற்கு தகுதி இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதில் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதுமில்லை என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 29.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 29.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகாமல் தன்னுடைய எழுத்துப்பூர்வமான 28.07.2025 நாளிட்ட வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

1. நான் இந்த வழக்கில் முறையீட்டு மனுதாரர், இந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. மனுதாரரால் கோரப்பட்டதும் ஊழல் தொடர்பான ஆதாரங்கள் அடங்கியதுமான பல்வேறு ஆவணங்கள் எதிர்மனுதாரரால் வழங்கப்படவில்லை.
3. மனுதாரரின் புகாரில் வழங்கப்படாத ஆவணங்கள் குறித்து பட்டியலிடப்பட்டு அதனை வழக்கு விசாரணையில் எதிர்மனுதாரரை முன்னிலைப்படுத்துமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.
4. மனுதாரர் ஏற்கனவே தேதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வேறு வழக்கில் ஆஜராக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், மாண்புமிகு இந்நடுவர் மன்றம் முன்பு குறப்பிட்ட தேதியில் ஆஜராக முடியவில்லை.
5. எதிர்மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள இதர ஆவணங்களை மனுதாரருக்கு வழங்கினால் மட்டுமே முழுமையான வாதுரையை மனுதாரர் சமர்ப்பிக்க இயலும்.
6. எதிர்மனுதாரரை குறிப்பிட்ட ஆவணங்களை மனுதாரருக்கு வழங்கும்படி உத்தரவிட்டு வேறு ஒரு விசாரணை தேதி அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.
7. கோரப்பட்ட ஆவணங்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டவுடன் மனுதாரர் தனது வாதுரையை முழுமையாகவும் ஆவணங்களின் அடிப்படையிலும் தாக்கல் செய்ய தயாராக உள்ளார்.
8. தற்போது மனுதாரர் வசம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணையத்தின் முன்பு பரிசீலிக்க வேண்டிய மற்றும் தீர்வு காணப்பட வேண்டிய ஏழு வினாக்கள் கீழ்க்கண்டவாறு பட்டியிலிடப்படுகின்றன:–

    I. முத்தமிழறிஞர் மு.கருணாநிதி அரங்கத்தை குத்தகைக்கு விட வெளியிடப்பட்ட விளம்பரத்தில் மூன்று வருடங்களுக்கு மட்டுமே குத்ததைக் காலம் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ள நிலையில் குத்தகைதாரருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு மேலும் ஒன்பது வருடங்களுக்கு குத்தகை ஒப்பந்தம் நீட்டித்து கொள்ளும் வகையில் குத்தகை ஒப்பந்தம் செய்துள்ளதில் நடைபெற்ற முறைகேடு.

II. முறைகேடான பணப்பயன் பெறுவதற்காக இந்த குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதா ?

III. மொத்தம் ஏலம் விடப்பட்ட 45 இனங்களில் 40 இனங்களுக்கு மறு ஏலம் விடுவதாகத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் இரண்டு நபர்கள் மட்டுமே கலந்து கொண்டு அதிலும் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி கேட்ட நபர் வைப்புத் தொகை செலுத்தாத நிலையில் அடுத்த நபருக்கு ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதில் நடைபெற்ற முறைகேடுகள்.

IV. உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி கேட்ட திரு. ரமேஷ் என்ற நபர் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாத நிலையில் அவரின் காப்புத் தொகை ஏன் பறிமுதல் செய்யப்படவில்லை.

V. சட்டவிரோத குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்ட ஆணையர் திருமதி மகேஸ்வரி என்பவருக்குப் பிறகு ஆணையராகப் பொறுப்பேற்ற திரு. கண்ணன் என்பவர் பல்வேறு முறைகேடுகள் செய்யப்பட்ட போதும் குத்தகை ஒப்பந்தத்தில் கண்டுள்ள முறைகேடான குத்தகை நீட்டிப்பு காலமான 9 வருடத்தை குத்தகை ஒப்பந்தத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்காதது ஏன்.

VI. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கான குத்தகைக்கால நீட்டிப்பிற்கும் குத்தகை உரிமைத் தொகையில் பதினைத்து சதவிகிதம் மட்டும் எந்த அடிப்படையில் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

VII. நகரின் வளர்ந்து வரும் மையப்பகுதியான புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள இந்த கட்டிடத்திற்கு குத்தகைத் தொகை அதிகமாக வசூல் செய்ய வாய்ப்புள்ள நிலையில் இந்த குத்தகைக் காலத்தை ஒருதலைப்பட்சமாக நீட்டிப்பு செய்து ஏன் குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட்டது ?

VIII. இந்த கலையரங்கத்தை தியேட்டர் நடத்துவதற்கு வசதியாக மாற்றியமைக்க எந்தவித அனுமதியும் பெறப்படாதநிலையில் குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

IX. குத்தகைக்கு கட்டிடத்தை ஒப்படைக்கப்பட்ட தேதியான 10.11.2023 லிருந்து மாநகராட்சி தகவல் வழங்கிய தேதியான 19.09.2024 வரை குத்தகைத் தொகை செலுப்படாத நிலையில் ஏன் குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்படவில்லை.

X. இந்த கலையரங்கத்தை தியேட்டர் நடத்துவதற்கு வசதியாக மாற்றியமைத்த பிறகு கட்டிட உறுதிச் சான்று பெறப்படாதநிலையில் தியேட்டர் நடத்த எப்படி அனுமதி வழங்கப்பட்டது.

XI. இந்த கலையரங்கத்தில் இயங்கி வரும் தியேட்டருக்கான கட்டணங்கள் குத்தகைத்தாரரின் விருப்பப்படி உயர்த்தப்பட வாய்ப்புள்ள நிலையில் குத்தகைத் தொகை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெறும் 15% மட்டுமே உயர்த்தப்படுவதாக ஒப்பந்தம் செய்துள்ளது ஏற்புடையதா ?

XII. இந்த கலையரங்கத்தில் இடம் வாடகைக்கு உள்ளதாகவும் இடம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளும்படி ஒரு தொலைபேசி எண் குறிப்பிட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. குத்தகைதாரர் சந்தை நிலவரத்திற்கு ஏற்றபடி வாடகை நிர்ணயம் செய்து உள் வாடகைக்கு விடும்நிலையில் குத்தகைத் தொகை 15% மட்டும் உயர்த்துவது சரியானதா ?

XIII. குத்தகை ஒப்பந்த காலத்திற்கு மட்டுமே கலையரங்கம் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளநிலையில் குத்தகைதாரர் எத்தனை வருடத்திற்கு எந்த நிபந்தனையின் பேரில் அனுமதி பெற்றார் என்ற விவரங்களை அறிந்து கொள்ளவும் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் மாநகராட்சி குத்தகைதாரருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு நீதிமன்றத்திற்கு உரிய தகவல்கள் வழங்காமல் செயல்பட்டதா என்பதை ஆய்வு செய்யவே வழக்கு தொடர்பான விவரங்கள் கோரப்பட்டன. இதனை வழங்க மாநகராட்சி நிர்வாகம் மறுத்ததால் முழுமையான வாதுரையை தாக்கல் செய்ய இயலவில்லை.

இந்நிலையில் முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை முழுமையாக ஆய்வுசெய்து விடுபட்ட ஆவணங்களை எனக்கு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு ஆவணங்கள் வழங்கப்பட்டபின் ஒரு தேதியை நிர்ணயித்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். இதில் முறைகேடு நடைபெற்றிருப்பதற்கான முகாந்தரம் இருப்பதால் குற்றப்பிரிவு காவல் துறை (CBCID) அல்லது விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் காவல் துறை (Vigilance & Anticorruption) விசாரணைக்கு உத்தரவிட அரசுக்கு பரிந்துரைத்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. தஞ்சாவூர் மாநகராட்சியின் இளநிலை உதவியாளர் 29.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''தஞ்சாவூர் மாநகராட்சியில் முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி மாநாட்டு அரங்கம் 17.08.2023ம் தேதி ஏலம் விடப்பட்டது. மேற்படி ஏலத்தில் திரு.ரமேஷ் மற்றும் திரு.வெற்றிவேல் ஆகியோர்கள் கலந்துக்கொண்டனர். திரு.ரமேஷ் என்பவரால் மாத வாடகை ரூ.25.00 இலட்சத்திற்கும், திரு.வெற்றிவேல் என்பவரால் மாதவாடகை ரூ.24.00 இலட்சத்திற்கும் ஏலத் தொகை கேட்கப்பட்டது. இதில் திரு.ரமேஷ் ரூ.6 கோடி கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாததாலும், திரு.வெற்றிவேல் என்பவரால் 19.08.2023ம் தேதியில் கூடுதல் வைப்புத் தொகை ரூ 3 கோடியும் 05.10.2023ல் ரூ2.50 கோடி செலுத்தப்பட்டதாலும் திரு.வெற்றிவேல் அவர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்.380, நாள் 20.09.2023–ன்படி மாத வாடகை ரூ24 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது.

மேற்படி மாநகராட்சி அரங்கத்தை திரை அரங்கமாக மாற்றுவதற்கு குத்தகைதாருக்கு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் 13.03.2023 கடிதத்தில் கோரப்பட்டது. இதற்கு ஆட்சேபணை தெரிவித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் நாள் 03.04.2024 மற்றும் 07.05.2024 மூலம் மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட்டது.

குத்தகைதாரரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P (MD) No.1708 of 2024ன் தீர்ப்பாணை நாள் 22.10.2024–ன்படி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் 20.12.2024 நாளிட்ட செயல்முறையின்படி திரை அரங்கு நடத்த குத்தகைதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது குறித்து அரசு வழக்கறிஞர் 13.02.2025 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீடு செய்வதற்கு தகுதி இல்லை என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விவரங்கள் மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன்படி தெரிவிக்கப்பட்டன என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்ட மனு நாள் 10.07.2025 ன் நகலினை பெற்றுக்கொண்டேன். இந்த மனுவில் கோரப்பட்டுள்ள விவரங்கள் குறித்து மனுதாரருக்கு அளிக்க உரிய நடவடிக்கை தஞ்சாவூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.”

7. முறையீட்டு மனுதாரரின் மனு, எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் மனுதாரரருக்கு முகவரியிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்ட அறிவிப்பு மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தஞ்சாவூர் மாநகராட்சியில் முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி மாநாட்டு அரங்கத்தை குத்தகைக்கு விட வெளியிடப்பட்ட விளம்பரத்தில் மூன்று வருடங்களுக்கு மட்டுமே குத்ததைக் காலம் என்று தெளிவாகக் குறிப்பிட்டு குத்தகைக்கு விடப்பட்டதினை, ஒன்பது வருடங்களுக்கு குத்தகை ஒப்பந்தம் நீட்டித்து கொள்ளும் வகையில் குத்தகை ஒப்பந்தம் செய்துள்ளதில் நடைபெற்ற முறைகேடு மற்றும் இந்த கலையரங்கத்தை தியேட்டர் நடத்துவதற்கு வசதியாக மாற்றியமைக்க எந்தவித அனுமதியும் பெறப்படாத நிலையில் குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்யவில்லை என்பதும், தியேட்டர் நடத்துவதற்கு மாற்றியமைக்கப்பட்ட மேற்கண்ட கலையரங்கத்தின் கட்டிடத்தின் உறுதித் தன்மை சான்று பெறப்படவில்லை என்பதும், குத்தகை ஒப்பந்த காலத்திற்கு மட்டுமே கலையரங்கம் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளநிலையில் குத்தகைதாரர் எத்தனை வருடத்திற்கு எந்த நிபந்தனையின் பேரில் அனுமதி பெற்றார் என்ற விவரங்களை அறிந்து கொள்ளவும், வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் மாநகராட்சி குத்தகைதாரருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்டு நீதிமன்றத்திற்கு உரிய தகவல்கள் வழங்காமல் செயல்பட்டதா என்பதை ஆய்வு செய்யவே வழக்கு தொடர்பான விவரங்கள் கோரப்பட்டன என்பதும், இந்த நிலையில் முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை முழுமையாக ஆய்வுசெய்து விடுபட்ட ஆவணங்களை தனக்கு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு ஆவணங்கள் வழங்கப்பட்டபின் ஒரு தேதியை நிர்ணயித்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பும்படியும், இதில் முறைகேடு நடைபெற்றிருப்பதற்கான முகாந்தரம் இருப்பதால் குற்றப்பிரிவு காவல் துறை (CBCID) அல்லது விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் காவல் துறை (Vigilance & Anticorruption) விசாரணைக்கு உத்தரவிட அரசுக்கு பரிந்துரைத்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் எழுத்துபூர்வமான வாதுரை ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தஞ்சாவூர் மாநகராட்சியில் முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி மாநாட்டு அரங்கம் 17.08.2023ம் தேதி ஏலம் விடப்பட்டதில், கலந்து கொண்டு திரு.ரமேஷ் மற்றும் திரு.வெற்றிவேல் ஆகியோரில் திரு.ரமேஷ் என்பவரால் மாத வாடகை ரூ.25.00 இலட்சத்திற்கும், திரு.வெற்றிவேல் என்பவரால் மாதவாடகை ரூ.24.00 இலட்சத்திற்கும் ஏலத் தொகை கேட்கப்பட்டது என்பதும், இதில் திரு.ரமேஷ் ரூ.6 கோடி கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாததாலும், திரு.வெற்றிவேல் என்பவரால் 19.08.2023ம் தேதியில் கூடுதல் வைப்புத் தொகை ரூ 3 கோடியும், 05.10.2023ல் ரூ2.50 கோடியும் செலுத்தப்பட்டதாலும் திரு.வெற்றிவேல் அவர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்.380, நாள் 20.09.2023–ன்படி மாத வாடகை ரூ24 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது என்பதும், மேற்படி மாநகராட்சி அரங்கத்தை திரை அரங்கமாக மாற்றுவதற்கு குத்தகைதாரருக்கு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் 13.03.2023 கடிதத்தில் கோரப்பட்டு, இதற்கு ஆட்சேபணை தெரிவித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் நாள் 03.04.2024 மற்றும் 07.05.2024 மூலம் மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதும், குத்தகைதாரரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.A. (MD) No.1708 of 2024ன் தீர்ப்பாணை நாள் 22.10.2024–ன்படியும் மற்றும் அரசு வழக்கறிஞர் 13.02.2025 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீடு செய்வதற்கு தகுதி இல்லை என தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் 20.12.2024 நாளிட்ட செயல்முறையில் திரை அரங்கு நடத்த குத்தகைதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதும், மேற்கண்ட விவரங்கள் மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்ட 10.07.2025 நாளிட்ட வாதுரையில் கோரப்பட்டுள்ள விவரங்கள் குறித்து மனுதாரருக்கு அளிக்க உரிய நடவடிக்கை தஞ்சாவூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் மனுதாரருக்கு முகவரியிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட அறிவிப்பு மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி மாநாட்டு அரங்கம் ஏலம் விடப்பட்டு, திரையரங்கமாக மாற்றப்பட்டது குறித்தான மேற்கண்ட புகாரின் பொருண்மையும், சென்னையைச் சேர்ந்த திரு. T. ராஜரத்தினம் என்பவரின் 19.04.2025 நாளிட்ட மனுவில் மற்றவற்றுக்கிடையே மேற்கண்ட பொருண்மை குறித்த புகாரும் அளிக்கப்பட்டிருந்ததால் அது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை எண் 150/மா/2025 நாள் 04.09.2025–ல், மேற்கண்ட மாநாட்டு அரங்கம் ஏலம் விடப்பட்டு, திரையரங்கமாக மாற்றப்பட்டது. மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் நடைபெற்றதால், அந்நேர்வில் இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது ஏதுமில்லை என ஆணை வெளியிடப்பட்டது. எனவே, மனுதாரரின் மேற்கண்ட புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது ஏதுமில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. எனினும், தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி மாநாட்டு அரங்கம் ஏலம் விடப்பட்டுள்ளதில் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இனங்கள் தொடர்பாக ஒரு சிறப்பு உள்ளாட்சி நிதி தணிக்கை மூலம் அரசுக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிபடுத்தி கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம்

ஆணையிடுகிறது. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அறிக்கையின் பேரில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. M.நெடுஞ்செழியன்,
106, திருவேங்கடம் நகர்,
தஞ்சாவூர்–613 005.

(2) ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
காந்திஜி சாலை, தஞ்சாவூர்.

(3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை, 4வது தளம்,
நந்தனம்,
சென்னை–600 035.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

9/2/26
செயலாளர்
9.2.26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032